2024

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

## දෘශ්‍යාබාධිත පුනරුත්ථාපන භාර අරමුදල

## விழிப்புலனற்ற நபர்களின் நம்பிக்கை நிதியம்

## Rehabilitation of the Visually Handicapped Trust Fund


සමාජ සේවා දෙපාර්තමේන්තුව
දෙවන මහල
සෙත්සිරිපාය - II අදියර
බත්තරමුල්ල

# 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# விழிப்புலனற்ற நபர்களின் நம்பிக்கை நிதியம்
# **செலவுத் தலைப்பு - 216-2-3-3-1508**

சமூக சேவைகள் திணைக்களம்
இரண்டாம் மாடி
செத்சிரிபாய - கட்டம் II
பத்தரமுல்ல

தொலைபேசி - 0112187050
தொலைநகல் - 0112186276
மின்னஞ்சல் - TrustFund20SSD@gmail.com

# 2024 ஆம் ஆண்டு விழிப்புலனற்ற நபர்களின் நம்பிக்கை நிதிய முகாமைத்துவ சபை மற்றும் பணியாள்தொகுதி

| | |
|---|---|
| 01. சங். கலபொட ஞானிஸ்ஸர தேரர் | - ஆயுட்கால உறுப்பினர் |
| 02. திருமதி யமுனா பெரேரா | - தலைவர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம் |
| | - செயலாளர் - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |
| திரு. ரஞ்சித் ஆரியரத்ன | - தலைவர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம் |
| | - செயலாளர் - புத்த சாசன, சமய பண்பாட்டலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு சமூக பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| திருமதி மலர்மதி கங்காதரன் | - தலைவர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம் |
| | - செயலாளர் - கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுதகாப்பு மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |
| 03. திருமதி தர்ஷனீ கருணாரத்ன | - சமூக சேவைப் பணிப்பாளர் |
| 04. செல்வி என்.வை.கொஹொவல | - சிரேஷ்ட உதவிச் செயலாளர் - பிரதமரின் செயலாளர் அலுவலகம் |
| 05. திரு.ஆர்.எம்.பி.எச்.குணரத்ன | - செயலாளர் - இலங்கை கண்பார்வை அற்ற ஜன சேவை சபை |
| திரு.அசோக பந்துல வீரவர்தன | - செயலாளர் - இலங்கை கண்பார்வை அற்ற ஜன சேவை சபை |
| 06. திரு.கமல்சிரி நானாயக்கார | - தலைவர் - தேசிய விழிப்புலனற்ற நபர்கள் சம்மேளனம் |
| 07. திருமதி எச்.ஜே.நில்மினி | - தலைவர் - இலங்கை விழிப்புலனற்ற மக்கள் சம்மேளனம் |
| திரு. ரசிக திலக் த சில்வா | - செயலாளர் - இலங்கை விழிப்புலனற்ற மக்கள் சம்மேளனம் |
| 08. திரு. கௌஷல்யா ராஜபக்ஷ | - லயன்ஸ் கழக பிரதிநிதி - மாவட்டம் 306 B2 லயன்ஸ் கழகம் |

**கண்காணிப்பாளர்**

| | |
|---|---|
| திரு. சுகத் வசந்த த சில்வா | - தலைவர் - இலங்கை விழிப்புலனற்ற பட்டதாரிகள் சபை |

**உத்தியோகத்தர்கள் சபை**

| | |
|---|---|
| 01. திரு. ஈ.ஏ.வை.எதிரிசிங்ஹ | - செயலாளர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம் |
| 02. செல்வி. ஜே.எல்.அத்துகோரல | - பொருளாளர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம் |
| 03. செல்வி. ஜீ.தினூஷா சந்தீபனீ | - முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் |
| 04. திருமதி. கே.டப்.ஆர்.இரேஷா | - முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் |

**உள்ளடக்கம்**

**அத்தியாயம் 01 - நிதியம் பற்றிய விவரம்**

1.1. அறிமுகம்
1.2. சட்டப் பின்னணி
1.3. குறிக்கோள்
1.4. நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி
1.5. நிதியத்தின் பிரதான செயற்பாடுகள்
1.6. தாபனக் கட்டமைப்பு

**அத்தியாயம் 02 - நிதியத்தின் வருடாந்த செயலாற்றுகை**

2.1. விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம்-நிதி முன்னேற்றம்
2.2. பௌதிக செயலாற்றுகைத் தரவுகள்
2.3. சட்டத்தின் குறிக்கோள்களுடன் இணங்குதல்
2.4. பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை
2.5. விசேட சாதனைகள்

**அத்தியாயம் 03 – ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

# அத்தியாயம் 01

## நிறுவன விவரம் / நிறைவேற்றுச் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

இலங்கையில் இறுதியாக நடைபெற்ற (2012) தொகை மதிப்பு மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின் பிரகாரம் விழிப்புலனற்ற நபர்கள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்பது இலட்சத்தையும் தாண்டியுள்ளது. அத் தரவுகள் இற்றைக்கு 12 ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டதுடன் தற்போது இந்த எண்ணிக்கையில் பாரியளவு விகிதாசார ரீதியிலான மாற்றம் ஏற்பட்டுள்ளது என ஊகிக்க முடியாது. மேலும் இந்த கணக்கெடுப்பின் பிரகாரம் இலங்கையின் சனத்தொகையில் 8.7% சதவீதத்தினர் அங்கவீனமுற்ற நபர்கள் என தெரிய வந்துள்ளதுடன் அது 16 இலட்சத்தை தாண்டியுள்ளது. அதன் பிரகாரம் நோக்கும் போது இந்த நாட்டின் அங்கவீனமுற்ற சனத்தொகையில் பெரும்பாண்மையினர் விழிப்புலனற்ற நபர்கள் அல்லது பார்வைக் குறைபாடுள்ள நபர்களாக காணப்படுகின்றார்கள்.

பார்வைக் குறைபாடு தவிர்ந்த கண் பார்வையற்ற நபர்கள் உடல் ரீதியாக மற்றும் உள ரீதியாக ஏனைய நபர்களுக்கு ஒப்பானவர்கள் ஆவார்கள். தற்போது அவர்களின் வருமான உழைப்பு செயன்முறை எவ்வாறானதாக காணப்பட்ட போதும் ஆரம்ப காலங்களில் அவர்கள் நாட்டில் வாழும் சாதாரண பிரசைகள் போன்று தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் செயன்முறைக்காக பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டு செயற்திறனுடன் நடவடிக்கை மேற்கொண்ட நபர்கள் ஆவார்கள். விசேடமாக உள்நாட்டு கைத்தரி நெசவுக் கைத்தொழிலில் ஈடுபட்டு அவர்கள் தேசிய உற்பத்திக்கு சிறப்பான பங்களிப்பை மேற்கொண்டார்கள்.

1977 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக விழிப்புலனற்ற சமூகத்தினர் தன்னிடம் காணப்பட்ட சுயாதீன பொருளாதார உற்பத்திச் செயற்பாட்டுக்கு பல்வேறு தடைகள் ஏற்பட்டன. விசேடமாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் செயன்முறை படிப்படியாக வீழ்ச்சியடையத் துவங்கியது. போட்டி நிலைமையின் கீழ் இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு தன்னிடம் காணப்பட்ட அங்கவீன நிலைமை அவர்களை அசௌகரியத்துக்கு ஆளாக்கியது.

இதன் பிரகாரம் தாம் எதிர்கொண்ட அசௌகரியங்களுக்கு ஓரளவு நிவாரணம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவர்கள் கூட்டிணைந்ததுடன் தாம் எதிர்கொண்ட இந்த அசௌகரிய நிலைமைகள் தொடர்பாக அப்போதிருந்த அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக விழிப்புலனர்வற்ற சமூகத்துக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அவர்களது நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க விழிப்புலனற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்ற பெயரில் பாராளுமன்றத்தில் சட்டம் ஒன்றை அங்கீகரித்து அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு செயற்படுவதற்காக விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டது.

ஆரம்பம் முதலே இதன் அலுவலகம் சமூக சேவைகள் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டு சமூக சேவைகள் திணைக்களம் மூலம் வழங்கப்படும் வளங்களைப் பயன்படுத்தி செயற்படுகிறது. தற்போது இந்த நிதியத்திற்காக வருடாந்த வரவு செலவுத் திட்டம் மூலம் சமூக சேவைகள் திணைக்களத்தின் செலவுத் தலைப்பு இலக்கம் 216 இன் கீழ் 9 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் தற்போதுள்ள ஒதுக்கீடுகள் நாட்டில் வாழுகின்ற விழிப்புலன் அற்ற சமூகத்துக்கு அதிகபட்ச சேவைகளை வழங்குவதற்காக நிதியத்தின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள். இந்த செயலாற்றுகை அறிக்கை மூலம் நிதியத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் தொடர்பாக 2024 ஆம் ஆண்டுக்கான மொத்த செயலாற்றுகை சமர்ப்பிக்கப்படுகிறது.

## 1.2. சட்டப் பின்னணி

1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டமானது விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தாபிப்பதற்கும் அதன் குறிக்கோள்கள் மற்றும் அதிகாரங்களை நிரணயித்துக் காட்டுவதற்காகவும் மற்றும் அதனோடு இணைந்த அல்லது இடைநேர் விளைவான விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்பட்ட ஒரு சட்டம் ஆகும். தற்போது இந்த நிதியமானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் உள்ள சமூக சேவைகள் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

## 1.3. குறிக்கோள்

சட்டத்தின் 5 ஆம் பந்தி பிரகாரம் விழிப்புலனற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு.

(அ) விழிப்புலன் அற்ற நபர்களுக்காக கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வசதிகளை வழங்குதல்

(ஆ) விழிப்புலன் அற்ற நபர்களுக்காக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தேவையான போது அவர்களுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்காக நிதி உதவிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.

(இ) விழிப்புலன் அற்ற நபர்களுக்கு கலைப் பாடநெறிகளை தொடர்வதற்கு அல்லது தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொள்வதற்கு இயலுமானவாறு அவர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குதல்.

(ஈ) விழிப்புலன் அற்ற நபர்களின் நலன்புரிக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(உ) விழிப்புலன் அற்ற நபர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.

(ஊ) சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் விழிப்புலன் அற்ற நபர்களைத் தடை செய்யும் நிலைமைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**1.4.** விழிப்புலனற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி

**தொலைநோக்கு**

விழிப்புலன் அற்ற நபர்களுக்காகு அபிமானத்துடன் கூடிய சுதந்திரமான வாழ்க்கை

செயற்பணி

அங்கவீனமுற்ற நபர்களுக்கு சமத்துவம் மற்றும் சம பங்களிப்பினை உறுதி செய்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல், விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகும் நபர்களை அதிலிருந்து மீட்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், புனர்வாழ்வு, அவர்கள் விடயத்தில் நலன்புரிகளை மேற்கொள்ளல்

## 1.5. நிதியத்தின் பிரதான செயற்பாடுகள்

### 1. விளையாட்டு உதவிகளை வழங்குதல்

* விழிப்புலன் அற்ற நபர்களுக்கு அல்லது விழிப்புலன் அற்ற நபர்களின் அமைப்புக்களுக்கு அல்லது விழிப்புலன் அற்ற மாணவர்கள் கல்வி பயிலும் விசேட பாடசாலைகளுக்கு விளையாட்டு உதவிகளை வழங்குதல்

### 2. கல்வி மற்றும் கலாசார உதவிகளை வழங்குதல்

* விழிப்புலன் அற்ற பாடசாலை மாணவர்கள, விழிப்புலன் அற்ற பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குதல்

* பிரேல் மொழி மூலம் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகைக்கு (காலம்) உதவி வழங்குதல்

* விழிப்புலன் அற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்காக தொழிநுட்ப உபகரணம் வழங்குதல்.

### 3. புனர்வாழ்வு உதவிகளை வழங்குதல்

* பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களுக்கு புனர்வாழ்ளித்து சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்
* பொதுவான எழுத்தில் அச்சிடப்பட்ட புத்தகங்களைப் பேச்சு புத்தகங்களாக மாற்றும் பேச்சுப் புத்தகங்களை தயாரிக்கும் நிகழ்ச்சி திட்டம்
* விழிப்புலன் அற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி பெற்றுகொள்வதற்கான உதவிகளை வழங்குதல்.

### 4. விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாவதை தடுக்கும் நோக்கில் 60 வயதுக்கு குறைந்த நபர்களுக்கு கண் வில்லை மற்றும் கண் சிகிச்சைக்கான உதவி வழங்குதல்

### 5. சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினத்தை நினைவுகூரும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல்

### 6. விசேட கோரிக்கைகளின் பிரகாரம் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் விழிப்புலன் அற்ற மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளின் ஆலோசகர்களுக்கு கொடுப்பனவுகளை (தற்காலிக) மேற்கொள்ளல்

# 1.6. தாபனக் கட்டமைப்பு



# அத்தியாயம் 02
## நிதியத்தின் வருடாந்த செயலாற்றுகை

**2.1.** விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - நிதி முன்னேற்றம்

**2024/12/31** இல் செலவுத் தலைப்பு **216- 02-03-3-1508**

| தொ. இல. | நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு ரூ. | செலவு ரூ. |
|---|---|---|---|
| 01 | தொழில் பயிற்சி மற்றும் ஆலோசகர் கொடுப்னவு | 49,160.00 | - |
| 02 | புணர்வாழ்வு உதவிகள் | 1,164,000.00 | 1,021,318.00 |
| 03 | விளையாட்டு உதவிகள் | 110,000.00 | 110,000.00 |
| 04 | கல்வி மற்றும் கலாசார உதவிகள் | 5,453,000.00 | 5,106,400.00 |
| 05 | சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின தேசிய நினைவு தின விழா | 736,000.00 | 735,908.00 |
| 06 | கண் வில்லை மற்றும் கண் சிகிச்சை | 150,000.00 | 51,650.00 |
| 07 | கணக்காய்வுக் கட்டணம் | 162,840.00 | 162,840.00 |
| 08 | நிர்வாக செலவுகள் | 1,128,000.00 | 1,064,770.06 |
| 09 | நிதிச் செலவுகள் | 5,000.00 | - |
| 10 | நானாவித செலவுகள் | 42,000.00 | 31,573.00 |
| **மொத்தம்** | | **9,000,000.00** | **8,284,459.06** |

## 2.2. பௌதிக செயலாற்றுகைத் தரவுகள்

| விபரம் | 2023 ஆம் ஆண்டு இறுதியில் பௌதீக செயலாற்றுகை |
|---|---|
| 1. நடாத்தப்பட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எண்ணிக்கை | 07 |
| 2. கல்வி மற்றும் கலாசார உதவிகள் | |
| i. தரம் 1 முதல் க.பொ.த. (சா.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் | 74 |
| ii. க.பொ.த. (உ.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் | 11 |
| iii. பல்கலைக்கழக விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமை பரிசில் | 32 |
| iv. விழிப்புனர்வு அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில் | 150 |
| v. பிரேல் மொழி மூலம் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகை (காலம் சஞ்சிகை) இதழ் | 03 |
| vi. விழிப்புலன் அற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்காக தொழிநுட்ப உபகரணம் வழங்குதல். | 18 |
| 3. புனர்வாழ்வு உதவிகள் | |
| இலங்கை கண்பார்வையற்ற ஜன சேவை சபை மூலம் நடாத்தப்படும் பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களுக்காக நடாத்தப்படும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் | |
| i. ஆலோசகர்கள் | 05 |

| | |
|---|---|
| ii. பயிலுநர்கள்<br><br>iii. பொதுவான எழுத்தில் எழுதப்பட்ட புத்தகங்களை பேச்சு மொழிப் புத்தகங்களாக மாற்றுவதற்கான பேச்சு புத்தகக் கருத்திட்டம் | 19<br><br>2400 அச்சுப் பிரதிகள் |
| 4. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின தேசிய நினைவு தின விழா | 01 |
| 5. நானாவித உதவிகள்<br><br>i. விழிப்புலனற்ற நபர்களின் வீடுகளுக்கு குடிநீர் வழங்குதல்.<br><br>ii. விழிப்புலனற்ற நபர்களின் கிரிக்கட் போட்டித்தொடருக்கு விளையாட்டு மைதான கட்டணம் செலுத்துதல் | <br><br>02<br><br>01 |
| 6. கண் வில்லை மற்றும் கண் சிகிச்சை வழங்குதல் | 01 |

## 2.3. சட்டத்*-தின் குறிக்கோள்களுடன் இணங்குதல்

| தொ. இல. | குறிக்கோள் | செயற்பாடுகள் |
|---|---|---|
| 01 | விழிப்புலன் அற்ற நபர்களுக்கு கல்வி சார் மற்றும் தொழிற்பயிற்சி வசதிகளை வழங்குதல் | i. தரம் 01 ஒன்று முதல் க.பொ.த. (சா.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில்<br>ii. க.பொ.த. (உ.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில்<br>iii. பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில்<br>iv. விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில்<br>v. விழிப்புலன் அற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்காக தொழிநுட்ப உபகரணம் வழங்குதல்.<br>vi. பிரேல் மொழி மூலம் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகைகு (காலம் சஞ்சிகை) உதவி வழங்குதல் |
| 02 | விழிப்புலன் அற்ற நபர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கான கருதிட்டங்களை நடைமுறைப்படுதுதல் | i. கண் வில்லை மற்றும் கண் சிகிச்சை தொடர்பில் உதவி வழங்குதல்<br>ii. புனர்வாழ்வு உதவி வழங்குதல் (பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நபர்களை பனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல்)<br>iii. விழிப்புலனற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்குதல். |
| 03 | சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் விழிப்புலன் அற்ற நபர்களைத் தடை செய்யும் நிலைமைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் | i. பேச்சுப் புத்தகங்களை தயாரிப்பதற்கான உதவிகளை வழங்குதல் |

| | | |
|---|---|---|
| | | ii. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின தேசிய நினைவு தின விழாவை நடாத்துதல் |

## 2.4. பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

| | இலக்கு / நோக்கம் | இலக்கு | சாதனைக் குறிகாட்டி | இது வரை சாதனைகளைப் பெற்றுக் கொள்வதன் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| 4.5 | 2030 ஆம் ஆண்டளவில் கல்வியில் ஆண் பெண் பால் நிலையின் அடிப்படையில் பாகுபாடுகளை நீக்குதல், கல்வியின் அனைத்து மட்டங்களுக்கும் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்களை உறுதி செய்தல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு, உள்நாட்டவர்களுக்கு மற்றும் அபாயத்துக்கு ஆளாவதற்கான வாய்ப்புக்கள் கொண்ட சிறுவர்களுக்கு தொழிற் பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் | பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி பயிலும் விழிப்புலன் அற்ற மாணவ மாணவிகளுக்கு புலமைப் பரிசில் வழங்குதல் | புலமை பரிசீலர்களை பெற்றுக் கொண்ட மாணவர் எண்ணிக்கை | | | √ |
| | | விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் பாடசாலைக் கல்வி பயிலும் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல் | புலமை பரிசீலர்களை பெற்றுக் கொண்ட மாணவர் எண்ணிக்கை | | | √ |
| | | பல்கலைக்கழக கல்வி பயிலும் விழிப்புலன் அற்ற பட்டதாரி மாணவர்களுக்கான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் (கையடக்க தொலைபேசி) | தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக் கொண்ட பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை | | √ | |
| 10.2 | 2030 ஆம் ஆண்டளவில் வயது, பால் நிலை, இனம், சாதி, மதம் அல்லது பொருளாதாரம் அல்லது ஏனைய நிலைமைகள் பற்றிக் கருத்திற் கொள்ளாது அனைவரதும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் இடைத்தொடர்புகளை வலுவடையச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் | பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களுக்கு புணர்வாழ்வழித்து சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவி வழங்குதல் | புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை | | | √ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | விழிப்புலன் அற்ற நபர்களின் வாசிப்பு உரிமையை உறுதி செய்வதற்காக பிரேல் மொழி மூலம் மாதாந்தம் வெளியிடப்படும் காலம் சஞ்சிகைக்கு உதவி வழங்குதல் | வெளியிடப்படும் சஞ்சிகை தவனைகளின் அளவு | | | √ |
| | | விழிப்புலன் அற்ற நபர்களின் பயணிக்கும் கருவியாக உள்ள வெள்ளைப் பிரம்பை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தின தேசிய நினைவு தின விழா | விழாக்களில் கலந்து கொண்ட விழிப்புலனற்ற நபர்களின் எண்ணிக்கை | | | √ |

### 2.5 விசேட சாதனைகள்

- வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளாக மேடை நாடகம் மற்றும் லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றை மேற்கொள்ளல்.
- 2024 ஆம் ஆண்டு 273 விழிப்புலன் அற்ற மாணவர்களுக்காக புலமைப்பரிசில் மற்றும் தொழில்நுட்ப உபகரணம் வழங்க கூடியதாயிருந்தது. .

### 2.6 சவால்கள்

- நாட்டில் வாழும் ஒட்டுமொத்த விழிப்புலன் அற்ற சமூகத்துக்கு சேவை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளல்.
- போக்குவரத்து மற்றும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய குழுக்களுக்காக மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சேவை பெறுநர்களைப் பங்கேற்கச் செய்வதில் உள்ள சிக்கல்.

### 2.7 இலக்குகள்

- நாடு முழுவதிலும் வாழும் ஒட்டுமொத்த விழிப்புலனற்ற சமூகத்தை இலக்காக கொண்டு சேவை வழங்குதலை விரிவுபடுத்தல்.
- விசேட பாடசாலைகளில் உள்ள விழிப்புலன் அற்ற மாணவ மாணவிகளின் விளையாட்டுத் திறமைகளை அபிவிருத்தி செய்தல்.

தலைவர்
விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

பெயர் -

பதவி -

திகதி -

# அத்தியாயம் 03

## விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
## 31 டிசம்பர் 2024 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

| | | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | |
| அரசாங்க அளிப்புகள் | | 9,000,000.00 | 8,460,000.00 |
| ஏனைய பெறுவனவுகள் | | 424,882.00 | 410,000.00 |
| நிலையான வைப்பு வட்டி | | 286,169.77 | 464,459.56 |
| | | **9,711,051.77** | **9,334,459.26** |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | | |
| விளையாட்டு உதவிகள் | | 110,000.00 | - |
| தொழிற் பயிற்சி செலவுகள் | | - | 40,000.00 |
| கல்வி மற்றும் கலாசார உதவிகள் | | 5,280,400.00 | 4,439,357.00 |
| புனர்வாழ்வு உதவிகள் | | 1,021,338.00 | 1,238,642.31 |
| நிர்வாக செலவுகள் | | 1,064,770.06 | 991,516.30 |
| கண்வில்லை மற்றும் கண் சிகிச்சை | | 51,650.00 | 92,954.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 162,840.00 | 158,700.00 |
| நிதிச் செலவுகள் | | - | - |
| நானாவித செலவுகள் | | 31,573.00 | 139,257.00 |
| வெள்ளைப் பிரம்பு தின செலவுகள் | | 725,908.00 | 1,254,319.38 |
| மூலப்பொருள் அகற்றும் செலவுகள் | | | 48,250.00 |
| | | **8,448,479.06** | **8,402,995.99** |
| ஆண்டுக்கான தேறிய மிகை / பற்றாக்குறை | | 1,262,572.71 | 931,463.57 |

## 31 டிசம்பர் 2024 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | | |
| சாதாரண நடவடிக்கைகள் மூலம் (மிகை அல்லது குறைவு) | | 1,262,572.71 | 931,463.57 |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு</u>** | | | |
| வெள்ளைப் பிரம்பு தின செலவுகள் | | | 10,000.00 |
| கல்வி மற்றும் கலாசார உதவி செலவுகள் | | 48,100.00 | |
| புனர்வாழ்வு உதவிச் செலவுகள் | | | |
| நிர்வாக செலவுகள் | | | 2,070.00 |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்களின் குறைவு</u>** | | | |
| புனர்வாழ்வு செலவுகள் | | (74,775.00) | 501,500.00 |
| கல்வி மற்றும் கலாசார உதவி செலவுகள் | | | (222,000.00) |
| வெள்ளைப்பிரம்பு செலவுகள் | | (10,000.00) | |
| தொழிற் பயிற்சி | | (22,000.00) | (40,000.00) |
| **<u>நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு</u>** | | | |
| நிலையான வைப்பு | | (2,786,169.77) | (464,459.56) |
| **<u>நடைமுறைச் சொத்துக்களின் குறைவு</u>** | | | |
| முடிவுப்பொருள் இருப்பு | | | 48,250.00 |
| இறுதி ஆண்டின் இலாப சீராக்கல் தொகை (2021,2022,2023) | | 222,695.00 | |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல் | | **(1,359,577.06)** | **766,824.01** |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | 2,742,799.62 | 1,975,975.61 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | **1,383,222.56** | **2,742,799.62** |

## 31 டிசம்பர் 2024 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | | |
| வங்கி மீதி | | 1,383,222.56 | 2,742,799.22 |
| நிலையான வைப்பு | | 5,416,919.96 | 2,630,750.19 |
| இறுதிக் கையிருப்பு | | | |
| - மூலப்பொருள் | | | |
| - முடிவுப்பொருள் | | - | |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,800,142.52** | **5,373,549.41** |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | | |
| - | | | |
| அட்டுறு செலவுகள் | 01 | 1,238,570.00 | 1,297,245.00 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,238,570.00** | **1,297,245.00** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **5,561,572.52** | **4,076,304.41** |
| **<u>உரிமையாண்மை</u>** | | | |
| திரண்ட நிதியம் | | **4,298,999.81** | **3,144,841.24** |
| ஆண்டுக்கான தேறிய மிகை | | 1,262,572.71 | 931,463.57 |
| **மொத்த தேறிய உரிமையாண்மை** | | **5,561,572.52** | **4,076,304.81** |

பொருளாளர்
விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எல்எஸ்டப்/டி/வீஎச்ரீஎப்/எப்எஸ்/2024 2025 மே 26 ஆம் திகதி

தலைவர்
விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேற்குறித்த அறிக்கை இதனோடு அனுப்பப்பட்டுள்ளது.

**டப்ளிவ் ஜீ.எச்.டீ.தர்மபால**
கணக்காய்வாளர் (பதில் கடமை)

பிரதி - 1. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
2. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எல்எஸ்டப்/டி/வீஎச்ரீஎப்/எப்எஸ்/2024 2025 மே 26 ஆம் திகதி

தலைவர்
விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் பற்றிய கூற்று மற்றும் அத் திகதியில் உள்ளவாறான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், அளவு ரீதியான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய 2023 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை அரச துறையின் கணக்காய்வு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 128 இற்கு அமைவாக நிதிக் கூறுக்களின் குறிப்புக்கள் நடைமுறைச் சாத்தியமாக மற்றும் முறைசார்ந்த ரீதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களின் முகப்பில் ஒவ்வொரு விடயம் தொடர்பான குறிப்புகளில் காணப்படும் சம்பந்தப்பட்ட தகவல்களுக்கு எதிரே குறிப்புக்கள் காட்டப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டில் வருமதியாகவுள்ள வட்டி வருமானமான ரூ.100,222 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

(இ) நிலையான வைப்பு மீதி ரூ.5,321,437 என கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய போதும் ரூ.5,416,919 என கணக்குகளில் பதிவு செய்யப்பட்டமையால் நிலையான வைப்பு மீதி ரூ.95,482 மிகையாக காட்டப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு நியமங்களின் கீழ் இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினர் ஆகியோரின் பொறுப்பு**

இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.
நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் ஆற்றலை தீமானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் நிதியத்தை முடிவுக்கு வருவதற்கு முகாமைத்துவம் கருதுவதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அன்றி தொடர்ச்சியாக நடவடிக்கை முன்னெடுக்கப்படலின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தை தொடர்ந்தும் முன்னெடுத்தல் தொடர்பான விடயங்களை வெளிக்கொணர்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரிசோதிக்கும் பொறுப்பு அதனை நிர்வகிக்கும் தரப்பினருக்கு உரியதாகும்.

19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வூ நியமங்களின் பிரகாரம் கணக்காய்வூ மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு பெறப்பட்டது.

- வெளிக்கொணர்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அளவு ரீதியான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்கான நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்தும் போது ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான அளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் கருதுவதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிக்கொணர்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையின் போது கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்த வெளிக்கொணர்தல்கள் போதுமானதாக அமையாது விடின் எனது அபிப்பிராயம் விளக்கப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் கீழ் தொடர்ச்சியான இருப்பு முடிவடைவதற்கு இடமுண்டு.

- நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென

மற்றும் வெளிக்கொணர்தல் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவூட்டப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன..

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் கடந்த ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிகளுக்கு இணங்காமை

| சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிகளுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1844 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க லொத்தர் சீட்டிழுப்பு கட்டளைச்சட்டம்<br>8.1 மற்றும் 11 ஆம் பிரிவு | சமூக சேவைகள் திணைக்களத்தின் விழிப்புலன் அற்ற நபர்களின் புனர்வாழ்வு நிதியம் மற்றும் அத்திணைக்களத்தின் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்திற்கு உதவி பெற்றுக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்புக்காக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சரின் உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

3.2 நிதியத்தின் காமைத்துவம்

(அ) விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகள் கடந்துள்ள போதும் முழு இலங்கையும் உள்ளடங்கும் வகையில் விழிப்புலனற்ற நபர்களின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கான தகவல் முறைமை ஒன்று இதுவரை தயாரிக்கப்படவில்லை.

(ஆ) விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்குவதற்கான லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டுள்ளதுடன் உரிய அனைத்து நிதி நடவடிக்கைகளும் சமூக சேவைகள் திணைக்களத்தின் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்தின் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் லொத்தர் விற்பனை மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் ரூ.625,000 ஆக காணப்பட்ட போதும் நிதியத்திற்கு கிடைத்த தொகை ரூ.218,700 ஆக அமைந்தமையால் அச்சிடப்பட்ட டிக்கட் புத்தகங்களின் எண்ணிக்கை, விற்பனைக்காக வழங்கப்பட்ட டிக்கட் புத்தகங்களின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக்கொண்ட நபர்களின் விபரம், விற்பனை செய்யப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்படாத டிக்கட் புத்தகங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) சமூக சேவைகள் திணைக்களத்தின் விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மற்றும் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்திற்கு நிதியுதவி பெறுவதற்காக அரங்கேற்றப்பட்ட மேடை நாடகத்திற்கான அனைத்து நிதி நடவடிக்கைகளும் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்தின் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. மேடை நாடக டிக்கட் விற்பனை மூலம் ரூ.630,000 ஐ விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் ரூ.163,338 மாத்திரம் நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றது.

(ஈ) நினைவுமைலர் ஒன்றை வெளியிடுதல் தொடர்பான வர்த்தக விளம்பரம் பெற்றுக்கொள்வதற்காக சமூக சேவைப் பணிப்பாளரால் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடிதங்களில் விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கணக்காய்வுப் பணிகள் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்படுவதால் அனுசரணை வழங்குமாறு காட்டப்பட்ட போதும் அந்த அனுசரணைத் தொகையை நிதியத்தில் செலவு வைக்காது சமூக சேவைத் திணைக்களத்தின் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. இந்த மேடை நாடக அரங்கேற்றப் பணிகளுக்காக அச்சிடப்பட்ட டிக்கட் புத்தகங்களின் எண்ணிக்கை, டிக்கட் புத்தக விற்பனை டூலமான வருமானம் மற்றும் விபரங்கள், விற்பனை செய்யப்படாத டிக்கட் புத்தகம் மற்றும் நிதிக் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரங்கள் கணக்காய்வுப் பணிகளுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.3 ஏனைய விடயங்கள்**

(அ) மீளாய்வு ஆண்டில் கண்வில்லைகள் வழங்குவதற்காக ரூ.150,000 தொகையினை மூன்று பயனாளிகளுக்கு வழங்குவதற்கு செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதும் பயனாளி ஒருவருக்கு மாத்திரம் ஆண்டின் இறுதியில் ரூ.51,650 ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 34 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) நிதியத்தின் மூலம் இரண்டு பேண்தகு இலக்குகள் இனங்காணப்பட்ட போதும் அது தொடர்பான இலக்குகளின் அளவுரீதியான தன்மையினை இனங்காணாது நோக்கங்களின் முன்னேற்றம் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் அடையப்பெற்றுள்ளதாக செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. செயலாற்றுகை அறிக்கையில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் பௌதீக செயலாற்றுகை காட்டப்பட்ட போதும் அதன் அளவு மதிப்பீடு செய்யப்பட்ட அளவுடன் இணக்கம் செய்யப்படவில்லை.

**டப்ளிவ் ஜீ.எச்.டீ.தர்மபால**
கணக்காய்வாளர் (பதில் கடமை)